# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>பிரதமர் மோடி அவர்களுக்கு இலங்கை ஜனாதிபதி வாழ்த்து</u>

## இலங்கையுடனான வலுவான உறவுகளுக்காக இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை பிரதமர் மோடி வலியுறுத்தினார்

## தொலைநோக்கு ஆவணத்தை செயல்படுத்துவதில் இரு தலைவர்களும் ஆர்வம்

பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களுடன் தொலைபேசி ஊடாக உரையாடியிருந்த இலங்கை ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வரலாற்று முக்கியத்துவமிக்க தேர்தல் வெற்றிக்காக அவருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்திருந்தார்.

2. அன்பான வாழ்த்துகளைப் பகிர்ந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனது நன்றியினைத் தெரிவித்திருந்தார். இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் சாகர் கோட்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான உறவுகளை கட்டி எழுப்புவதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை அவர் இதன்போது தெரிவித்திருந்தார்.

3. 2023 ஜூலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் புதுடில்லிக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது வெளியிடப்பட்ட தொலைநோக்கு ஆவணத்தினை அமுல்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் இரு தலைவர்களும் குறிப்பிட்டிருந்தனர். குறிப்பாக, பரஸ்பர வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் செழுமை ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக தொடர்பாடல்களை அதன் சகல பரிமாணங்களிலும் மேம்படுத்துவதில் காணப்படும்

முன்னேற்றங்களை மேலும் விரைவுபடுத்துவதற்கான தமது அர்ப்பணிப்பினையும் இரு தலைவர்களும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

***********

**கொழும்பு**
**6 ஜூன் 2024**

https://pib.gov.in/PressReleseDetailm.aspx?PRID=2022976